கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்
1கொரிந்தியர் 1:30



# ஞான ஒலி

## இணைய வார இதழ்

www.newwisdomministries.com
ஞானம் 5 - ஒலி 52 | 25-12-2022

MERRY Christmas




# கொடுக்கப்பட்டவை கொடுப்பதற்கே...




அருட்பணி. சைமன் பீட்டர்

# நல்லுள்ளம் படைத்தவர்கள் ஏழைகளுக்காகத்தான்...

அன்பிற்கினிய சகோதர, சகோதரிகளே வணக்கம். உங்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கிறிஸ்து என்றால் அன்பு. கிறிஸ்து பிறப்பு உண்மையான அன்பின் பிறப்பு. அன்பு என்றால் என்னவென்பதை இறைவன் மனிதனாகப் பிறந்து, வாழ்ந்து காட்டிய வரலாற்றுப் பதிவுதான் இயேசுவின் வாழ்க்கை வரலாறு.

**கட்சிமனப்பான்மைக்கும் வீண் பெருமைக்கும் இடம் தர வேண்டாம். மனத் தாழ்மையோடு மற்றவர்களை உங்களிலும் உயர்ந்தவராகக் கருதுங்கள். நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ள வேண்டும். கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்! பிலிப்பியர் 2:3-5**

அந்த அன்பு புனிதம் அடைவது எவ்வாறு என்பதைத்தான் கல்வாரிச் சிலுவையில் இயேசு தன் மரணத்தின் மூலம் செய்து காண்பித்தார்.

அதைக் கற்று வாழ்வில் கடைப்பிடித்தோர் அனைவரும் புனிதர்களாக, மாபெரும் மானிடராக மக்களால் போற்றப்படுகின்றார்கள்.

சமீபத்தில் நடந்து முடிந்த உலகக் கோப்பை கால்பந்து விளையாட்டில் அர்ஜென்டினா சாம்பியன் பட்டத்தை வென்றது. 36 ஆண்டு உலகக் கோப்பைக் கனவு அன்று நிறைவேறியது. உலகமே அர்ஜென்டினாவின் வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது.

இந்தத் தலையங்கத்தின் தலைப்பு அன்புக்கும், அர்ஜென்டினாவின் வெற்றிக்கும் என்ன தொடர்பு என்று ஒரு கேள்வி எழலாம்.

காரணத்தோடுதான் அதைப்பற்றி இங்கு எழுதவிருக்கின்றேன்.

அர்ஜென்டினாவின் வெற்றியை இந்த உலகம் பேசுவதைவிட, அந்த அணியின், ஏன் இந்த உலகத்தின் நட்சத்திர ஆட்டக்காரர் லயோனல் மெஸ்ஸி அவர்களைத்தான் அதிகமாக உச்சி முகர்ந்து பாராட்டிக் கொண்டிருக்கின்றது.

நமது பங்குக்கும் அவரை மனதார வாழ்த்துகின்றோம். பாராட்டுகின்றோம், முக்கியமாக உங்கள் சார்பாக.

கால்பந்து உலகின் முடிசூடா மன்னன் என்று இன்றும், என்றும் போற்றப்படுகின்ற பீலே அவர்கள் சமீபத்தில்

இன்று உள்ள கால்பந்தாட்ட வீரர்களிலேயே மிகச் சிறந்த வீரர் மெஸ்ஸிதான் என்று கூறியுள்ளார்.

அவர் சொல்வது உண்மையிலும் உண்மை. ஏனென்றால்...

மெஸ்ஸி அவர்களின் தனிப்பட்ட வாழ்வில் அவர் செய்து வரும் மனித நேயப் பணிகள்தான் அதற்றுக் காரணம்.

வலது கை செய்வதை இடது கை அறியாதிக்கும்படி அவர் செய்கின்ற பிறர் நலப் பணிகளைப் பற்றி இங்கு காண்போம்.

முதலில் அவரது இவ்வருட வருமானம் எவ்வளவு என்பதைப் பார்ப்போம். இந்த ஆண்டில் மெஸ்ஸி விளையாட்டின் மூலம் பெற்ற வருமானம் 900 மில்லியன் யூரோக்கள். அதன் இந்திய ரூபாயின் மதிப்பு 79,04,56,84,515 ரூபாயாகும்.

இந்த வருமானத்தில் பெரும் பகுதியை நன்கொடையாகவும், பிறர்நலப் பணிகளுக்காகவுமே கொடுக்கின்றார்.

யுனெஸ்கோவின் நல்லெண்ணத் தூதுவராக நிறமிக்கப்பட்டுள்ள அவர் அந்த அறக்கட்டளையின் வருவாயில் 48 சதவீதம் மெஸ்ஸியின் நன்கொடையால் வருகின்றது. அதைக் கொண்டுதான் யுனெஸ்கோ தன் சேவையைச் செய்கின்றது.

இதுவரை மெஸ்ஸி 189 நாடுகளில் 9847 பள்ளிகளை உருவாக்கியுள்ளார். ஏழை எளியக் குழந்தைகளின் கல்விக்கு அவர் எவ்வளவு முக்கியத்துவம் தருகின்றார் என்பது இதன் மூலம் அறிகின்றோம்.

மேலும் 40 மில்லியன் குழந்தைகளின் முழுக் கல்விச் செலவுகளையும் அவரே ஏற்றுக் கொண்டுள்ளார்.

அவருடைய தொண்டு நிறுவனத்தின் மூலம் உலகில் 15 மில்லியன் தெருக் குழந்தைகளுக்கு உதவுகின்றார்.

மெஸ்ஸி ஆரம்பத்தில் அர்ஜென்டினா அணியில் இருந்தபோது, உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியில் அர்ஜென்டினா இரண்டாவது இடத்தைப் பிடித்தது. அதனால் அவர் பெற்ற முழுப் பணத்தையும் அர்ஜென்டினாவில் இருந்த மருத்துவமனைகளுக்கு நன்கொடையாகவே வழங்கிவிட்டார்.

கென்யாவில் வறுமையில் வாடிய மக்களுக்கு நல்ல குடிநீர் கட்டுமானத்திற்கு 2 லட்சம் யூரோக்களை அவர் வழங்கியுள்ளார்.

ஃபோர்ப்ஸ் பத்திரிக்கை ஒவ்வொரு வருடமும் இவ்வாறு நன்கொடை கொடுப்பவர்களின் பட்டியலைத் தயாரிக்கும் அவ்வாறு பெரும் நன்கொடை கொடுக்கும் உலகின் மிகச் சிறந்த 50 நபர்களில் மெஸ்ஸியும் ஒருவர் என்றால் அது எவ்வளவு பெரிய பெருமை. அதுவும் இந்த இளம் வயதில் இத்தனை பெரிய மனம் படைத்த மெஸ்ஸி, பீலே சொன்னதுபோல ஆகச் சிறந்த மாமனிதன்தான்.

இத்தகைய ஈதல் குணத்திற்குத்தான் அவருக்கு இவ்வளவு விளையாட்டுத் திறமையையும், உலகப் புகழையும் இறைவன் கொடுத்திருக்கின்றார்.

கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும். அதுவும் அமுக்கிக் குலுக்கி நன்றாக அளந்து கொடுக்கப்படும் என்று இயேசு சொன்னது நல்லுள்ளம் படைத்தவர்களுக்குத் தான்.

உதவும் மனமே இயேசு வாழும் உறைவிடம். அது நமது மனமாகட்டும். கொடுப்பது சிறிதானாலும், முகமலர்ச்சியோடு கொடுப்போம். அவர்களை இறைவன் அசீர்வதிப்பார்.

We Don't Need to have deep pockets
or be rich to help the poor,
needy and hungry.
We need to have an Heart.

- Kevin Dcruz



# விவிலியம் அறிவோம் – 70



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## உடன்படிக்கை விதிகள்

பண்டைய மேற்காசிய நாடுகளில் எழுதப்பட்ட உடன்படிக்கைப் பத்திரங்கள் சில அடிப்படை சட்டங்களையும், மற்றும் நீண்ட விதிகளையும் வரைமுறைகளையும் கொண்டதாக இருக்கும். சீனாய் மலையில் ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுடன் செய்த உடன்படிக்கையில் அடிப்படைச் சட்டங்களாக பத்துக்கட்டளைகள் உள்ளன. அதைத் தொடர்ந்து பல்வேறு விதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த உடன்படிக்கை விதிகளை விப 21 முதல் 23 முடிய உள்ள பிரிவுகளில் நாம் வாசிக்கலாம். உடன்படிக்கை விதிகள் இரண்டு விதமான சட்டங்களை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன. அவற்றை நாம் 1) தடைச்சட்டங்கள். 2) காரணச்சட்டங்கள் என அழைக்கலாம். தடைச்சட்டங்கள் எவற்றைச் செய்யக்கூடாது என்பதை அறுதியிட்டுக் கூறுகின்றன. உதாரணமாக, சூனியக்காரி எவளையும் உயிரோடு விட்டு வைக்காதே (விப 22:18) என்ற சூனியக்காரர்களுக்கு எதிரான சட்டத்தைக் கூறலாம். தடைச்சட்டங்கள் பொதுவான கோட்பாடுகள். இதற்கு மாறாக, காரணச்சட்டங்கள் குறிப்பிட்ட சூழ்நிலைகளின் மேல் கவனம் செலுத்துகின்றன. உதாரணமாக, திருடர் கன்னமிடுகையில் கண்டுபிடிக்கப்பட்டுத் தாக்குண்டு இறந்து போனால் அவருக்காக இரத்தப்பழி இல்லை. கதிரவன் உதித்தபின் இது நிகழ்ந்திருந்தால், இரத்தப்பழி உண்டு. அவர் ஈடுகொடுத்தே ஆகவேண்டும். திருட்டுக்கு ஈடாக அவரிடம் எதுவுமே இல்லையெனில் அவர் விற்கப்படுவார் (விப 22:;1-2) என்ற சட்டத்தைக் கூறலாம்.

உடன்படிக்கை நூலில் (விப 21:1-23:19) காணப்படும் சட்டங்கள் விவிலியத்தில் காணப்படுகின்ற சட்டங்களில் பழமையானவை. இந்தச் சட்டங்கள் பலவிதமான சட்டச் சூழ்நிலைகளைப் பற்றிப் பேசுகின்றன. உதாரணமாக, அடிமைத்துவம், வன்முறை செயல்கள், களவு, விபசாரம் போன்றவற்றைக் கூறலாம். இந்தச் சட்டங்களில் கொடுக்கப்படும்



தண்டனைகள் மிகவும் கடுமையானவை. அவை கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல் என்ற கோட்பாட்டைப் பின்பற்றுகின்றன. இந்தச் சட்டங்கள் கிராமங்களில் உள்ள வாழ்க்கைச் சூழ்நிலைகளைக் குறித்துக் காட்டுகின்றன. உதாரணமாக, இஸ்ரயேல் மக்கள் வாக்களிப்பட்ட நாட்டில் குடியமர்ந்த காலம் அல்லது மன்னராட்சி காலத்தின் தொடக்கம் போன்ற சூழ்நிலைகளைப் பிரதிபலிப்பதாக உள்ளன. இந்தச் சட்டங்கள் வணிகம், திருமண வாழ்வு, ஒழுக்க நெறிகள், தனிமனித கடமைகள் போன்றவற்றை வரையறுத்து ஒழுங்குபடுத்துகின்றன. உடன்படிக்கை விதிகளை லேவியர் நூலில் காணப்படும் தூய்மை விதிகள் மற்றும் இணைச்சட்டம் நூலில் காணப்படும் இணைச்சட்ட விதிகள் ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் இறையியல் வளர்ச்சி பெறாத சட்டங்களாகவே இவை காணப்படுகின்றன. அதைவிட முக்கியமாக, உடன்படிக்கை விதிகளில் குருத்துவம், கோவில், அரசன், அரச நிர்வாகம் போன்ற எதைக்குறித்தும் சட்டங்கள் இல்லை.

உடன்படிக்கை விதிகளுக்கும் (விப 21-23) பண்டைய மேற்காசிய நாடுகளில் கடைபிடிக்கப்பட்ட விதிகளுக்கும் தொடர்புகள் இருப்பதாக இன்றைய அறிஞர்கள் குறித்துக் காட்டுகின்றனர். குறிப்பாக, மெசப்பெத்தோமியாவின் அரசனாக விளங்கிய அமுராபியின் விதிகளுக்கும் உடன்படிக்கை

விதிகளுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாகக் கூறுகின்றனர். அமுராபியின் விதிகள் ஏறக்குறைய கி.மு. 1700 ஆம் ஆண்டளவில் எழுதப்பட்டவை. இந்த விதிகள் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அறிஞர்களால் படிக்கப்பட்டு வந்துள்ளன. அவர்களின் ஆய்வின் மூலம் அமுராபியின் விதிகளில் காணப்படும் பெரும்பாலான சட்டங்கள் பண்டைய மேற்காசிய நாடுகளில்; வழக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன என்பதை அவர்கள் கண்டுபிடித்துள்ளனர். எனவே அமுராபியின் விதிகளில் பல சட்டங்கள் அரசன் அமுராபிக்கு முன்பே வழக்கத்தில் இருந்த சட்டங்கள் எனலாம். விடுதலைப் பயணம் நூலில் வருகின்ற உடன்படிக்கை விதிகளுக்கு அமுராபியின் விதிகளுடன் தொடர்பு இருப்பதாகக் கூறினாலும் அவை அமுராபியின் விதிகளைத் தழுவி எழுதப்பட்டுள்ளன எனக் கூறமுடியாது. இரண்டு சட்டத் தொகுப்புகளும் பண்டைய மேற்காசிய நாடுகளில் உள்ள மாறுபட்ட சட்ட மரபுகள். இரண்டு தொகுப்புகளிலும் சில ஒற்றுமைகள் உள்ளன; வேற்றுமைகளும் உள்ளன. குறிப்பாக, இரண்டு சட்டத் தொகுப்புகளும் ஒரே குற்றத்தைப்; பற்றிப் பேசுகின்றபோது, அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள சட்ட தீர்வுகள் வித்தியாசமாக உள்ளன. மேலும் உடன்படிக்கை விதிகள் அமுராபியின் விதிகளைவிட எளிதானதாக, சுருக்கமானதாக, நகரமயமாக்கப்படாத விதிகளாக உள்ளன.

உடன்படிக்கை விதிகளில் 21:1-11 வரையுள்ள சொற்றொடர்கள், அடிமைகள் பற்றிய சட்டங்களைப் பதிவுசெய்கின்றன. இன்றைய வாசகர்களுக்கு அடிமைத்துவம் பற்றிய பல விதிகள் உடன்படிக்கை விதிகளில் இருப்பது உறுத்தலாக இருக்கலாம் (விப 21:1-11, 20-21, 26-27, 32). ஆனால் இஸ்ரயேல் மக்கள் உட்பட, பண்டைய கால மக்களுக்கு அடிமைத்துவம் யதார்த்தமான ஒன்று. அடிமைகளை விற்பதும் வாங்குவதும் சட்டத்திற்குட்பட்ட ஒரு செயலாகவே இருந்தது. இஸ்ரயேல் மக்களும் எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்தவர்கள். எனவே இந்தச் சட்டங்கள் அவர்களுக்காகவே எழுதப்பட்ட விதிகளாக உள்ளன எனக்கூறலாம். ஒருவர் பல காரணங்களுக்காக அடிமையாக மாறலாம். உதாரணமாக, ஒருவரை அதிகாரத்திற்கு உட்படுத்தி அடிமையாக அடுத்தவருக்கு விற்கலாம். யோசேப்பை அவருடைய சகோதரர்கள் மிதியானியர்களுக்கு அடிமையாக விற்பதை இங்கு நினைவு கூரலாம். வறுமையின் காரணமாக ஒருவர் தன்னை அடிமையாக விற்கலாம். வாங்கிய கடனை திருப்பி அடைக்க முடியாததால் அடிமைகளாக மாறுபவர்களும் உண்டு. பண்டைய மேற்காசிய நாடுகளில் கடன் தொல்லையினால் தங்களை அடிமைகளாக விற்பவர்கள்தான் அதிகமாக இருந்தார்கள். உதாரணமாக, சிறுகுறு விவசாயிகள் பல நேரங்களிலும் இத்தகைய சூழ்நிலைகளைச் சந்தித்தார்கள். மழை இல்லாமல் வறட்சி ஏற்படும்போது அவர்கள் நினைத்தபடி அறுவடை செய்யமுடியாது. தொடர்ந்து வறட்சி நிலை நீடித்தால் சிறு விவசாயிகளால் தொடர்ந்து வாழ்வது கடினமாகிறது. எனவே தங்கள் கடன்களை அடைப்பதற்காக அவர்கள் நிலத்தை விற்கவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுவார்கள். சில நேரங்களில் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் அடிமைகளாக விற்கவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படலாம். இஸ்ரயேல் மக்கள் நடுவிலும் கடன் தொல்லையினால் அடிமைகளாக விற்கப்பட்டவர்கள்தான் அதிகமாக இருந்தார்கள்.

உடன்படிக்கை விதிகள் இந்தச் சூழ்நிலைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு கடனை அடைப்பதற்காக ஒரு நியாயமான காலத்தை நிர்ணயிக்கிறது. கடனை அடைப்பதற்காக ஆறு வருடங்களுக்கு மேல் அடிமையாக வேலை செய்ய வேண்டியதில்லை. ஆறு வருடங்களுக்குப் பிறகு அவர்கள் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை. விடுதலை பெற்றவர்களாகச் திரும்பிச் செல்லலாம். இங்கே ஒன்றை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இந்த அடிமைகள் கடனிலிருந்து விடுவிக்கப்பட்டாலும் அவர்களின் நிலத்தைத் திரும்பப் பெறமுடியாது. நிலமற்றவர்களாக தொடர்ந்து வாழ்க்கை நடத்துவது கடினம். எனவே பெரும்பாலான அடிமைகள் ஆறு வருடங்களுக்குப் பிறகும் தொடர்ந்து அவர்களின் தலைவர்களிடம் வேலை செய்ய விரும்பலாம். விடுதலை அடைந்த ஒரு சிலர் வேறு நகரங்களுக்குச் சென்று வேலை தேடிக்கொள்ளலாம். எந்த அடிமையையும், அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி அவர்களுடைய விருப்பம் இல்லாமல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள முடியாது. மேற்காசிய நாடுகளில் பின்பற்றுவந்த அடிமைச் சட்டங்களை ஆராயும்போது இஸ்ரயேலின் அடிமைச் சட்டங்கள் கொடுமையான சட்டங்களாக இல்லை. இஸ்ரயேல் அடிமைகளின் மனிதத்தை மதித்தது; அவர்களை கண்ணியத்துடன் காத்தது. விடுதலை பெற்ற மனிதர்களைப்போல அடிமைகளுக்கு சரிசமமான உரிமைகள் இல்லையென்றாலும் அடிமைகள் துன்புறுத்தப்படுவதை இஸ்ரயேல் சட்டங்கள் எதிர்த்தன.

பெண் அடிமைகளைப் பொறுத்தவரையில் சட்டங்களில் சில வித்தியாசங்கள் இருந்தன. விப 21:4 பெண் அடிமைகள் உரிமையாளரின் சொத்து எனக் கூறுகிறது; என்றாலும் பெண் அடிமைகளின் திருமண உறவுகள் பாதுகாக்கப்பட்டன (விப 21:7-11). ஒருவன் தன் மகளை கடனை அடைப்பதற்காகவோ, அல்லது ஒரு கணவனைப் பெறுவதற்காகவோ அடிமையாக

விற்றிருந்தால் அவளுக்கு அதிகமான உரிமைகள் உள்ளன. அவளுடைய தலைவன் அவளை அன்னியருக்கு விற்க முடியாது; தலைவனுடைய மகனுக்காக அவளை நிச்சயித்திருந்தால் ஒரு மகளை நடத்துவதுபோல் அவளையும் நடத்தவேண்டும். அவளுக்குரிய உணவு, உடை, மண உறவின் கடமைகள் எதிலும் குறைவைக்கலாகாது. அவளுடைய உரிமையாளர் இவைகளை நிறைவேற்றாமல் இருந்தால் அவள் சுதந்திரமாக விடுதலை பெற்றுச் செல்லமுடியும். உடன்படிக்கை விதிகளில் அடிமைகள் பற்றிய சட்டங்களை ஆய்வு செய்யும்போது எபிரேய அடிமைகளுக்கு பல சலுகைகள் இருப்பதைப் பார்க்கமுடிகிறது. குறிப்பாக, அவர்கள் சொந்தக் காரணங்களுக்காகத் தங்களை அடிமைகளாக விற்றாலும் கடவுளின் மக்கள் என்ற உரிமையை இழக்கமாட்டார்கள்.

இஸ்ரயேல் சமூகத்தில் ஒருவராகவே அவர்கள் தொடர்ந்து வாழ்வர். கடவுளின் முன்னிலையில் ஏனைய இஸ்ரயேல் மக்களுக்குரிய எல்லா உரிமைகளும் அவர்களுக்கும் உண்டு. இதன் காரணமாகத்தான், எபிரேய அடிமைகளை ஒருவர் நிரந்தர அடிமைகளாக வைத்துக்கொள்ள முடியாது. ஆறு வருடங்கள் அடிமைகளாக ஊழியம் செய்தபின் அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும்.

விப 21:12-27 வரையுள்ள சொற்றொடர்கள் வன்முறை செயல்களுக்கான சட்டங்களைக் கூறுகின்றன. ஆனால் இதில் 12-17 வரையுள்ள சட்டங்கள் வன்முறை செயல்களில் மரணதண்டனை பெறக்கூடிய குற்றங்கள் பற்றிப் பேசுகின்றன. தனிமனிதர்களின் நலனுக்கும் சமூகத்தின் நலனுக்கும் இடையூறாக இருப்பவர்களுக்கு மரண தண்டனை கொடுக்கவேண்டியது அவசியமாக இருந்தது. எனவே கொலைக் குற்றவாளிகள், பெற்றோரை அவமதிப்பவர்கள், ஒருவரைக் கடத்திச் சென்று விற்பவர்கள் போன்றோர்; கொலைத் தீர்ப்புக்கு உரியவர்களாகக் கருதப்பட்டனர். ஏனெனில் இத்தகைய குற்றவாளிகள் மனிதர்களைக் காயப்படுத்துகிறார்கள். சமூகத்திற்குக் கேடு விளைவிக்கிறார்கள். மரண தண்டனை கொடுக்கப்படுவதற்கு அடிப்படைக் கோட்பாடு என்னவென்றால் இவர்களின் தண்டனை அடுத்தவர்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கவேண்டும் என்பதுதான். அவர்களின் தண்டனை எளிதானதாக இருந்தால் அது மற்றவர்களையும் அத்தகையை குற்றங்களைச் செய்யத் தூண்டலாம். மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களைக் கல்லால் எறிந்து கொல்வது வழக்கமாக இருந்தது. இதனால் அவருடைய இறப்பிற்கு ஒரு தனிமனிதர் பொறுப்பு ஏற்கவேண்டிய தேவையில்லை மாறாக தீமையை வேரறுப்பதில் அந்த சமூகம் முழுவதும் பங்கெடுக்கிறது.

எதிர்பாராத விதத்தில் ஒருவருடைய இறப்பிற்கு இன்னொருவர் காரணமாகியிருந்தால் அத்தகையவர்கள் அடைக்கல நகர்களுக்கு ஓடி தப்பித்துக்கொள்ளலாம் (காண் எண் 35:12; இச 4:41-43; 19:1-13; யோசுவா 20). இது கொலை செய்யப்பட்டவனின் குடும்பத்தினரிடமிருந்து அவனைக் காப்பாற்றுகிறது. அதே வேளையில் அதிகாரத்தில் இருப்பவர்கள் அவனது வழக்கைக் கேட்டு நீதி வழங்குவதற்கும் ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. அவன் கொலை செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்படவில்லை மாறாக எதிர்பாராத விதமாக கொலை நடந்துவிட்டது என தீர்ப்பளிக்கப்பட்டால் அவன் தொடர்ந்து பாதுகாப்பு பெறுவான். பெற்றோருக்கு மதிப்பளித்து, அவர்களைப் பாதுகாப்பது பிள்ளைகளின் கடமையாகக் கருதப்பட்டது. அவர்களைச் சபிப்பதும், அடிப்பதும் கொலைத் தண்டனைக்குரிய குற்றங்களாகக் கருதப்பட்டன. உன் தந்தையையும் தாயையும் மதித்து நட என்ற கட்டளையின் தொடர்ச்சி என இவற்றைக் கூறலாம். எல்லாத் தலைமுறையினரும் தங்கள் பெற்றோருக்கு மதிப்பளிக்கவேண்டும். அவர்களுக்குத் தேவையான உணவு, உடை மற்றனைத்தையும் வழங்கி பராமரிக்கவேண்டும் (காண் இச 21:18-21). மெசப்பெத்தோமியவின் சட்டங்களும் பெற்றோரை மதித்து, பராமரித்துப் பாதுகாப்பதற்கு முக்கியமளிக்கின்றன. சுமேரியச் சட்டத்தின்படி பெற்றோரைத் தள்ளிவிடும் ஒரு மகன் அடிமையாக விற்கப்படவேண்டும். தன் தந்தையை அடிப்பவனின் கை வெட்டப்படவேண்டும் என அமுராபி சட்டம் கூறுகிறது. உகாரித்து சட்டப்படி பெற்றோரை அவமதிப்பவன் சொத்துரிமையை இழக்கிறான். இன்னும் ஒருவரைக் கடத்திச் சென்று விற்பவனும் மரண தண்டனைக்குரியவன் எனச் சட்டம் கூறுகிறது. கடத்தல் பல்வேறு காரணங்களுக்காக நடந்தது. சில நேரங்களில் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்ததால் கடத்தப்பட்டு விற்கப்பட்டார்கள். பெரும்பாலான நேரங்களில் கடத்தப்படுதல் அடிமைகளாக விற்பதற்காகச் செய்யப்பட்டது. உடன்படிக்கை விதிகளும் மெசப்பெத்தோமிய விதிகளும் இத்தகைய குற்றங்களுக்கு மரண தண்டனை கொடுக்கின்றன. தனிமனிதர்களின் சுதந்திரத்தைக் காப்பதற்காக இத்தகைய கடுமையான தண்டனைகள் கொடுக்கப்பட்டன. அதேபோல எளியவர்கள், பலவீனமானவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திலும் கடினமான தீர்ப்புகள் வழங்கப்பட்டன.

பயணம் தொடரும்...



# ஞாயிறு மறையுரை

## கிறிஸ்து பிறப்புப் பெருவிழா

25-12-2022

முதல் வாசகம் - எசாயா 62:1-5
இரண்டாம் வாசகம் - திருத்தூதர் பணிகள் 13:16-17, 22-25
நற்செய்தி வாசகம் - மத்தேயு - 1:1-25 (அ) மத்தேயு 1:18-25


மறையுரை வழங்குபவர்.

அருட்பணி. **ஜஸ்டின் சேவியர் ராஜ்**
**பங்குத்தந்தை, திருக்குடும்ப ஆலயம்,**
**பெருந்துறை, கோயமுத்தூர்.**




ஓர் இடத்தில் யானைகள் நிறைய கட்டப்பட்டிருந்ததை அந்த வழியாகச் சென்ற ஒருவர் பார்த்தபடியாகச் சென்றார். ஒரே ஒரு சின்னக் கயிறு மட்டும்தான் யானைகளுடைய காலில் கட்டப்பட்டிருந்தது. இவ்வளவு பெரிய உருவம் கொண்ட யானை அதை அறுத்துக் கொண்டு போகாதா? என்று வியந்து நின்றான். அருகில் இருந்த பாகனிடம், இந்த யானைகள் கயிற்றை அறுத்துக் கொண்டு போகாதா? என்று கேட்டான். இந்த யானைகள் குட்டியாக இருக்கும்போது இந்தக் கயிற்றால்தான் அவற்றைக் கட்டியிருந்தோம். அப்போது அது இழுக்கும்போது இந்தக் கயிறுகளை அறுக்க முடியவில்லை. இந்த யானைகள் பெரிதாக பெரிதாக பழக்கதோஷத்தினால் தன்னால் இந்தக் கயிற்றை அறுக்க முடியாது என்று எண்ணி, கயிற்றை அறுக்க முயற்சி செய்வதில்லை என்று பாகன் பதில் சொன்னான்.

அந்த மனிதன் ஆச்சரியப்பட்டான். இந்த யானைகள் நினைத்தால் ஒரு நிமிடத்தில் இந்தக் கயிற்றை அறுத்துக் கொண்டு போகலாம். ஆனால் அவைகள் முயற்சி செய்வதில்லை. அதனாலேயே அவைகள் கட்டுண்டு கிடக்கின்றன.

இந்த யானைகளைப் போலவே நம்மில் நிறைய பேர் ஒருமுறை தோற்றதும் மீண்டும் முயற்சிக்காமல் துவண்டு போகின்றோம். தோல்வி என்பது நாம் வெற்றி பெறப் போவதன் முதல்படியே.. தொடர் முயற்சியே நம் வெற்றிக்கு வழிவகுக்கும்.

இறைஇயேசுவில் பிரியமானவர்களே, உங்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்து பிறப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள். பாலன் இயேசு உங்கள் உள்ளங்களிலும், இல்லங்களிலும் பிறந்து உங்கள் அனைவருக்கும் அன்பு, மகிழ்ச்சி, உடல் ஆரோக்கியத்தை நிறைவாகப் பொழிய மனமார வாழ்த்துகின்றேன். கிறிஸ்து பிறப்பு விழா மகிழ்ச்சியை நாம் ஒவ்வொருவரும் நன்கு தெரிந்து கொள்வதுடன், அதனை உணர்வுப் பூர்வமாக அனுபவிக்க வேண்டும்.

அந்த முதல் கிறிஸ்துமஸ் இரவில் மேய்ப்பர்களுக்கு அந்த மகிழ்ச்சியின் மூலத்தை வானதூதர் அறிவித்தார். அஞ்சாதீர்கள், இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்றும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். மெசியா என்னும் மீட்பர் நமக்காகப் பிறந்திருப்பதென்பது நமக்குப் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி.

இயேசு கிறிஸ்துவே ஆண்டவராகிய மீட்பர் என்ற கடவுளின் பரிசைப் பெறுவதன் மூலம் மட்டுமே கிறிஸ்து பிறப்பின் பெரும் மகிழ்ச்சி நமக்குக் கிடைக்கிறது. இறையேசுவின் பிறப்பிலே விண்ணவர், உன்னதத்திலே மகிமை, இம் மண்ணகத்திலே அமைதி என்று மங்கள கீதம் இசைத்தனர். கடவுளின் மகிமை, இறையேசுவின் பிறப்பிலே வெளியாகி உள்ளது. இறைவனது மீட்புச் செயலின் பயன், அமைதியாகும். நமக்கும் கடவுளுக்கும் ஏற்பட்ட பிளவைச் சரிபடுத்தி நம்மை இறைவனுடன் இணைக்கவும். நமக்குள் சமாதானத்துடன் வாழவும் வழி வகுக்கவே இறைவன் மனிதரானார். இயேசு பிறப்பால் நமது உள்ளத்திலும், இல்லத்திலும், பங்கிலும், நாட்டிலும் அமைதி நிலவ பாடுபட வேண்டும். இதற்று நல்ல உள்ளம் தேவை. இன்று நம்பிக்கையின் திருவிழா. நாம் அகதிகளல்ல, நம்மோடு வாசம் செய்ய இறைவன் மனிதனாகத் தோன்றி இருக்கின்றார். மனிதம் புனிதம் அடைந்த நாள். நாம் மனிதர்களை மதிக்கவும், நேசிக்கவும் தீர்மாணிப்போம். மனித உறவுகளுக்கு வேட்டு வைக்கின்ற பிரிவினை சக்திகளை, மொழி, இனம், கலாச்சார வேறுபாடுகளைக் களைந்து, கரம் கோர்த்து ஆண்டவரையும், அயலானையும் நேசித்து மண்ணகத்தில் விண்ணகத்தை ஒளிரச் செய்வோம். அனைவருக்கும் மீண்டும் கிறிஸ்துவின் பிறப்பு நல்வாழ்த்துக்கள்.

ஆமென்...



# கிறிஸ்து பிறப்பு விழா நள்ளிரவு திருப்பலி

எசா. 9:2-7 தீத். 2:11-14 லூக். 2:1-14

**25-12-2022**

## திருப்பலி முன்னுரை



**பா. சேவியர்**
திண்டுக்கல்

மனதுக்கு இதம் தரும் மார்கழி திங்களில், மதி நிறைந்த நள்ளிரவில், வானம் பனி பொழிந்து வாழ்த்தும் வேளையில், அகத்தில் உவகையும், புறத்தில் மகிழ்ச்சியும் பொங்கிப் பெருகிட கிறிஸ்து பிறப்பு விழா நள்ளிரவுத் திருப்பலியில் பங்கெடுத்து பயனடைய வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் மகிழ்வுடன் வரவேற்கிறேன்.

இந்நாள் ஏழைகள் விடும் பெருமூச்சின் பொருட்டு, இதோ நான் எழுகிறேன் என்று வாக்களித்திருந்த இறைவன், அநீதி அநியாயங்களின் அத்யாயத்திற்கு முடிவுரை எழுத இந்த மண்ணை முற்றுகையிட்ட நாள்.

இந்நாள், கடவுள் நம்மை அன்பு செய்கிறார் என்பதை நமக்கு வெளிப்படுத்தும் நாள்.

இந்நாள், கடவுள் நம்மோடு இருக்கிறார், நமது துன்பதுயரங்களில் நமக்குத் துணையாக இருக்கிறார் என்பதை வெளிப்படுத்தும் நாள்.

இந்நாள், கடவுள் நமக்காக தன் மகனையே தந்ததுபோல், நாமும் பிறருக்காக நம்மையே பகிர வேண்டும் என்பதை நினைவூட்டும் நாள்.

கடவுள் மனிதானவது, படைப்பவன் படைப்பாவது, கற்பனைக்கு அப்பாற்பட்டதுதான். ஆனால் முன்னுரைக்கப்பட்டும், உடன் உரைக்கப்பட்டும், பின்னுரைக்கப்பட்டும் வந்த உண்மை. பாவத்தளையில் சிக்குண்ட மனிதனை மீட்டு, அவனுக்குப் புதுவாழ்வு வழங்க, பரமன் இயேசு, பாலன் இயேசுவாய் இம்மண்ணில் பிறக்கிறார். அலகைக்கு அடிமைப்பட்டுக் கிடந்த இந்த அவனியை அன்பெனும் ஆயுதத்தால் மீட்டெடுக்க சாதாரண மனிதராய் பிறக்கிறார்.

இயேசுவின் பிறப்பிலிருந்து வெளிப்படுகிற எளிமையும் பணிவும் நம்மை கடவுளின் பிள்ளைகளாக வாழ அழைக்கிறது. மானிடனாய்ப் பிறந்த வாக்கான இயேசு, நம் உள்ளங்களிலும் இல்லங்களிலும் வந்துதித்து நம்மில் என்றும் குடிகொள்ளும் வண்ணம் நம் வாழ்வு அமைந்திட இன்றைய அருள் வாக்கு வழி காட்டுகிறது.

இறைமகன் இயேசு இத்தரணிக்கு கொண்டுவந்த அமைதியையும், அன்பையும் நாம் பெறுவதோடு மட்டுமல்ல அதை பிறருக்கு பகிர்ந்து கொடுக்க, அவர் கொண்டு வந்த அமைதியின் தூதர்களாக வாழ, இறைவனின் சாயலாக இருக்கும் ஏழை எளியோரைத் தேடி அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி மகிழ, உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சியும், உலகத்தில் அவர் தந்த அமைதியும் நின்று நிலைத்திட அமலன் இயேசுவின் அருளை வேண்டி இந்த நள்ளிரவுத் திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

மெசியா பற்றிய எசாயாவின் இறைவாக்கு இன்றைய முதல் வாசகமாக அருளப்பட்டுள்ளது. நமது வாழ்வின் இருள் அகற்றும் பேரொளியாய், வியத்தகு ஆலோசகராய், அமைதியின் அரசராய், என்றுமுள்ள இறைவனாய் ஒரு குழந்தை நமக்காக பிறந்துள்ளதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தின் ஒவ்வொரு சொல்லையும் கேட்டு மகிழ்வோம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

தம்மில் நம்பிக்கை வைக்கும் அனைவருக்கும் அருள் வாழ்வு அளிக்கவே கிறிஸ்து பிறந்தார். கிறிஸ்து பிறப்பு நம்மை பாவத் தளையிலிருந்து விடுவிப்பது மட்டுமல்ல, இறைவனோடு ஒரு புதிய உறவை ஏற்படுத்துகிறது என்பதை இன்றைய இரண்டாம் வாசகம் எடுத்துரைக்கின்றது. இறைமகன் இயேசுவின் முதல் வருகைக்கும், அவரது இரண்டாம் வருகைக்கும் உள்ள இடைப்பட்ட காலத்தை பயிற்சி காலமாக அறிவிக்கும் வியத்தகு இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) மாபெரும் மகிழ்ச்சியை உம் மகனின் பிறப்பு வழியாக எமக்கு தந்த இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவரும் மக்களுக்கு இறை நம்பிக்கை ஊட்டுபவர்களாகவும், உலகில் அமைதியை விதைப்பவர்களாகவும், மக்களை இருளின் பாதையிலிருந்து ஒளியின் பாதைக்கு அழைத்துச் செல்பவர்களாகவும், தங்கள் அர்ப்பணத்தில் உமக்கு என்றும் உண்மையுள்ளவர்களாகவும், உறுதியுள்ளவர்களாகவும் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) வியத்தகு ஆலோசகரும், வலிமை மிகுந்தவருமான தந்தையே இறைவா, தீமைசெய்தலை விட்டொழியுங்கள், நன்மை செய்ய கற்றுக்கொள்ளுங்கள் என்ற எசாயாவின் அன்பு கட்டளைகளை மனதில்கொண்டு, இவ்வுலகிற்கு உரியவையான உடல் ஆசை, இச்சை நிறைந்த பார்வை, செல்வச்செருக்கு முதலியவற்றை அகற்றி, பக்தி, நீதி, விவேகம் முதலியவற்றை பின்பற்றி வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) விடுதலை வாழ்வு கொடுக்க உம் திருமகனையே இம்மண்ணிற்கு ஈந்த அன்பு இறைவா, உம் திருமகனின் பிறப்பால் நாங்கள் பெறும் பெருமகிழ்ச்சியானது வெறும் புற மகிழ்ச்சியாக மட்டும் அமைந்துவிடாமல், ஆவியானவரால் தூண்டப்பட்டு எழும் அகமகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்றும், பிறரோடு பகிர்ந்துகொள்ளும் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

என்றென்றும் நீதியோடும், நேர்மையோடும் ஆட்சிபுரியும் அமைதியின் அரசரான அன்பு இறைவா, துன்ப துயரங்களாலும், நோய் நொடிகளாலும் வாடுகின்ற எம்மை கருணைகண் கொண்டு பாரும், எங்கள் குடும்பத்தை சூழ்ந்துள்ள துன்ப துயரங்களை முற்றாக விலக்கி, வாட்டுகின்ற நோய்களில் இருந்து எம்மை முழுவதுமாக விடுவித்து, எம்மை எல்லா கேடுகளில் இருந்தும் மீட்டு காத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# திருக்குடும்ப திருவிழா

சீஞா. 3:2-7, 12-14 கொலோ. 3:12-21 மத். 2:13-15, 19-23

## திருப்பலி முன்னுரை



**பா. சேவியர்**
திண்டுக்கல்

ஆண்டின் இறுதியில் திருக்குடும்ப திருவிழா! இது புலர்கின்ற புத்தாண்டின் பூபாளம். இந்த இனிய விழாவின் திருப்பலியில் பங்குகொண்டு பயன்பெற வந்துள்ள உங்கள் அனைவரையும் வணங்கி வரவேற்கிறேன்.

காலத்தின் ஓட்டத்தில், நாகரீகத்தின் வளர்ச்சியில், பண்பாட்டு மலர்ச்சியில் மனித குலத்துக்கு பரிசாக வாய்த்தது தான் குடும்பம். இது உறவுகளின் சங்கிலியால் உருவெடுத்து, அன்பையும் பண்பையும் அடித்தளமாகக் கொண்டு கட்டியமைக்கப்படுகிறது. அறநெறி கோட்பாடுகள், ஆன்மீக வழிமுறைகள், பண்பாட்டு பழக்கவழக்கங்கள், துன்ப துயரங்கள், மகிழ்ச்சி இன்பங்கள் இவற்றின் மூலம் வளர்த்தெடுத்து, நம்மை மனிதராய் வார்த்தெடுக்கும் கலைக் கூடம் தான் குடும்பம்.

ஒரு தெய்வம் இல்லாமல் கோயிலுமில்லை, ஒரு கோயில் இல்லாமல் தீபமுமில்லை. நீ எந்தன் கோயில், நான் அங்கு தீபம், தெய்வத்தின் முன்னே நீயும் நானும் வேறல்ல என்று கணவன் மனைவிக்கு இலக்கணம் வகுப்பது குடும்பம். நமது குடும்ப வாழ்வை, நம் உறவுகளின் நிலையை, அதன் மேன்மையை இன்றைய இறை வார்த்தைகள் வழியே சிந்திப்போம்.

சேர்ந்து வாழ்வதில் மட்டுமே சிறப்பிருக்கிறது. நாம் சேர்ந்து வாழ்கிறோமா? விட்டுக் கொடுத்தலில் மட்டுமே மகிழ்ச்சி இருக்கிறது. நாம் விட்டுக் கொடுக்கிறோமா? பகிர்தலில் மட்டுமே நிறைவு இருக்கிறது. நாம் பகிர்ந்து கொள்கிறோமா? புரிதலில் மட்டுமே வாழ்க்கை இருக்கிறது. நாம் புரிந்து கொள்கிறோமா? பெற்றவரை பேணுவதில்தான் நிம்மதி இருக்கிறது. நாம் பெற்றோரை பேணுகிறோமா? என்ற கேள்விகளை நம்முன் வைத்து நம்மை சிந்திக்க அழைக்கிறது இன்றைய இறைவாக்கு.

இறை மக்களாவதும், இறை மக்களாய் இருப்பதும் குடும்பம் என்னும் அருட்சாதனம் மூலமே. குடும்பம் என்ற அருட்சாதனத்தின் வழியேதான் மற்றெல்லா அருட்சாதனங்களும் உருவாகின்றன. கொள்வதும், கொடுப்பதுமான இம்மண்ணுலக குடும்ப வாழ்க்கை கொள்வதுமில்லை, கொடுப்பதுமில்லை என்ற விண்ணுலக திருக்குடும்ப வாழ்வை நோக்கி பயணிக்க ஆபிரகாம் - சாறாள், ஈசாக்கு - ரெபேக்கா, தொபியா - சாரா, செக்கரியா - எலிசபெத், மரியா - யோசேப்பு இவர்களின் குடும்பங்களைப் போன்று நற்பண்புகள் நிறைந்த குடும்பமாக நம் குடும்பம் திகழ இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம். தந்தை தாய் பேண், தந்தை சொல் மிக்க மந்திரமில்லை, தாயிற் சிறந்த கோயிலுமில்லை என்ற அவ்வையின் ஆத்திசூடி இங்கே சீராக்கின் ஆத்திசூடியாய் வெளிப் படுகிறது. நம் தாய் தந்தையரை பேணி நடக்கும்போது தான் நாம் இறை வனுக்குப் பிரியப்பட்டவர்களாய் வாழ முடியும் என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

குடும்பம் குறித்தும், குடும்ப உறவுகள் குறித்தும், தூய பவுல் அடிகளாரின் அழுத்தமான அறிவுரைகள் இன்றைய இரண்டாம் வாசகமாக வழங்கப் பட்டுள்ளது. குடும்ப வாழ்வும் கிறிஸ்துவ வாழ்வும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்பதை எடுத்துரைக்கின்றது. அன்பு சார்ந்த வாழ்வு குறித்தும், கணவன்-மனைவி-பிள்ளைகள் ஆகியோரின் கடமைகள் குறித்தும் ஆழமாக அழுத்த மாக எடுத்துரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1. திருக்குடும்பத்தின் ஒளியாக விளங்கும் அன்பு இறைவா, தலைக் குடும்பமான தாய் திருச் சபைக்கும், அதன் கிளைகளான ஒவ்வொரு கத்தோலிக்கக் குடும்பங்களுக்கும் அரணாகவும், வழிகாட்டியாகவும் இருந்து காத்துவரும் திருச்சபை யின் தலைவர்களை நிறைவாக ஆசீர்வதியும். அன்பையும் பண்பை யும் பரிவிரக்கத்தையும் மக்கள் நெஞ்சங்களில் விதைத்து, இறை யரசை வளர்த்தெடுக்கும் ஆற்றலை யும் நல்ல உடல் ஆரோக்கியத்தை யும் நிறைவாக அவர்களுக்குத் தந்து அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. வானகத் தந்தையே, நசரேத்தின் திருக்குடும்பத்தை எங்களுக்கு முன் மாதிரியாத் தந்த அன்பு இறைவனே, அன்பும் அமை தியும், மகிழ்ச்சியும் சமாதானமும் ஆட்சி செய்யும் நசரேத்தின் மற்றொரு குடும்பமாக எங்களது ஒவ்வொரு குடும்பமும் திகழ துணை செய்ய வேண்டுமாய் தூயவனே உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பை பகிர்ந்தளிக்க வந்த அன்பு இறைவா, எங்களது பங்கில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தையும் நிறைவாக ஆசீர்வதியும். சேர்ந்து வாழ்வதில் மட்டுமே சிறப்பிருக்கிறது. விடுக்கொடுத்து வாழ்தலில் மட்டுமே மகிழ்ச்சி இருக்கிறது என்பதை நாங்கள் ஒவ்வொருவரும் முழுமையாக உணர்ந்து அன்பு ஒன்றே குடும்பத்தின் ஆணிவேராகவும், அடித்தளமாகவும் உள்ளது என்பதை புரிந்து உம் திருக்குடும்பத்திற்கு சாட்சி பகரும் குடும்பமாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று வாழ்ந்து காட்டிய அற்புதக் குழந்தை இயேசுவே எமது பங்கில் உள்ள குழந்தைகளை நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் அன்பும் பண்பும் நிறைந்த குழந்தைகளாய், அறிவும் ஞானமும் நிறைவாய் பெற்ற குழந்தைகளாய், கீழ் படிதலும் ஆரோக்கியமும் கொண்ட பிள்ளைகளாய் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# திருக்குறள் வழங்கும்
# சமூக நெறிச் சிந்தனைகள்

சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM



**குறள் -25**

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி

## குறள் விளக்கம்

ஐந்து புலன்களாலாகும் ஆசைகளை ஒழித்தவனுடைய வல்லமைக்கு, வானுலகத்தாரின் தலைவனாகிய இந்திரனே போதுமான சான்று ஆவான்.

## சிந்தனை

ஆசையே துன்பத்திற்கு காரணம் என்பார் புத்தர். ஆனாலும் ஆசை இல்லாத மனிதன் உண்டோ? ஆசையை ஒழித்த மனிதன் உயர் நிலையை பெறுவான். இருப்பினும் ஆசையை பற்றிக் கொண்டு அழிவை நோக்கி பயணிப்பவர்களே இம்மண்ணுலகில் அதிகம்.

துர்ஹமின் பிறப்பாக இருந்த பட்லர், அறக்கட்டளை ஒன்றிற்கு நன்கொடை தருவதற்காக தன் பணியாளை அழைத்து, வீட்டில் எவ்வளவு பணம் இருக்கிறது என்று விசாரித்தார். பணியாள், ஐந்நூறு பவுண்டுகள் இருக்கின்றன என்றதும் அதிர்ந்து போனார் பிஷப். ஐந்நூறு பவுண்டுகளா! ஒரு பிஷப்பிடம் இவ்வளவு பணம் இருப்பதென்பது எவ்வளவு பெரிய அவமானம்! என்று சொல்லிவிட்டு அத்தனை பணத்தையும் அறப்பணிகளுக்கு உடனே தரும்படி உத்தரவிட்டார்.

பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்பர். தனக்கு, தன் தலைமுறைக்கு என செல்வத்தின் மீதுள்ள ஆசை எல்லையில்லாமல் விரிவடையும். பேராசையால் தான் சம்பாதித்த பணத்தின் முழு பலனையும் அடைந்தவர் எவருமில்லை என்பது முற்றிலும் உண்மை. இதனையே பண ஆசை உள்ளவருக்கு எவ்வளவு பணம் இருந்தாலும் ஆவல் தீராது: செல்வத்தின் மேல் மிகுந்த ஆசை வைப்பவர் அதனால் பயனடையாமற் போகிறார். இதுவும் வீணே என்கிறது சபை உரையாளர் 5:10.

பேருண்டி விருப்பமும், சிற்றின்ப ஆசையும் என்னை மேற்கொள்ள விடாதேயும்: தகாத எண்ணங்களுக்கு என்னை ஒப்புவிக்காதேயும் சீஞா 23:6. ஆசையிலிருந்து விடுபடவும், ஆசையினால் விளையும் துன்பத்திலிருந்து விடுபடவும் செபம் அவசியம் என்கிறது சீராக்கின் ஞானம். ஏனெனில் சிற்றின்ப ஆசையிலிருந்து ஐம்பொறிகளை அடக்கி ஆளும் வரம் பெற இறைஉதவியை நாடவேணடும் தன்பலம் போதாதபொழுது இறை துணை சுயகட்டுப்பாட்டை நம்மில் உருவாக்க உதவும்.

ஆசைகளில் பலவகை உண்டு. அதில் முதன்மையாக மண், பொன், பெண் ஆசைகளை குறிப்பிடுவோம். சில விபரீத ஆசைகளும் உண்டு. அதிகாரத்தை நாடி சுதந்திரத்தை பறிகொடுப்பது விபரீத ஆசை என்கிறார் பிரான்சிஸ் பேகன். இந்த விபரீத ஆசைகளால் விளைவது அவமானமும் அழிவும் தான் என உணர்வோம். ஆசைகளை குறைத்து வாழ பழகுவோம்.



சகோதரி. ரோசி. காங்கேயம்,
புனித காணிக்கை அன்னை சபை.

# சமூகமும்... சட்டமும்...

பறவையால் ஒரே இறக்கையால் பறக்க முடியாது என்பதுபோல, பெண்களை விட்டுவிட்டால் ஒரு தேசம் முன்னேற முடியாது என்று சுவாமி விவேகானந்தர் கூறியது சரிதான்.

ஆண்களும் பெண்களும் ஒரு முழுமையான முழுமையின் இரண்டு பக்கங்கள். ஒருவர் மற்றவர்க்குபலம். பெண்கள் மதிக்கப்படும் இடத்தில் கடவுள் வாழ்கிறார் என்று புத்திசாலித்தனமாக கூறப்படுகிறது. ஆண்களுக்கு நிகரான அவர்கள் வேதகாலத்தில் சமய விவாதங்களில் புத்திசாலித்தனமாக கலந்து கொண்டனர்.

ஆங்கிலேயர்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் ஒருபெண்ணுக்கு சுதந்திரம் அல்லது சீர்திருத்தங்கள் கிடைத்தன. ஆங்கிலேயர்கள் மட்டுமின்றி இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களும் பெண்களுக்கு அதிகாரம் அளிக்க பல முயற்சிகளை மேற்கொண்டனர். ராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, மகாத்மா காந்தி,அன்னிபெசன்ட், ராணி லக்ஷ்மிபாய், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் பங்களிப்பை மறக்க முடியாது.

காந்திஜி ஒருமுறை உண்மையாகச் சொன்னார். நீங்கள் ஒரு ஆணுக்குக் கல்வி கற்பிக்கும்போது ஒரு குடும்பத்திற்கு கல்வி கற்பிக்கிறீர்கள், ஒருபெண்ணுக்கு கல்வி கற்பிக்கும்போது நீங்கள் முழு நாட்டிற்கும் அல்லது சமுதாயத்திற்கும் கல்வி கற்பிக்கிறீர்கள். கல்வியின் பரவலுடன், புதிய இந்தியாவின்; மறுகட்டமைப்பில் பெண்கள் தங்கள் பங்கை உணரத் தொடங்குவதற்கு ஒரு அடிப்படை காரணம் இந்திய அரசியலமைப்பு சட்டம். அதாவது ஆணும் பெண்ணும் சம உரிமை உடையவர்கள் என்பதாகும்.

சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில், இந்தியப் பெண்களுக்கு உரிமைகள், விலக்குகள், சிறப்புரிமைகள் வழங்கப்படுகின்றன. மாநிலத்தின் மூன்று உறுப்புகளும் பெண்களின் நிலையை வலுப்படுத்துவதில் முழுப் பங்காற்றியுள்ளன.

சட்டமியற்றும் துறை பல சட்டங்களை பெண்களுக்காக இயற்றியுள்ளது. பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் மற்றும் வன்முறை இருந்து அவளைப் பாதுகாப்பது தொடர்பாக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பெண்களின் இன்றைய பரிதாப நிலையைச் சமாளிக்க முடியவில்லை. பெண்களுக்கு அரசியல் அதிகாரமளித்தலில் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. இது

துரிதப்படுத்தப்பட வேண்டும். பெண்கள் பிரச்சினை தொடர்பான தகவல்களைப் பரப்புதல், வழக்குகளில் விரைவாக செயல்படுதல் மற்றும் விரைவான விசாரணை முழுமையான நீதியைப் பெறுவதற்கு நீதிமன்றங்களின் முடிவுகளை சரியான நேரத்தில் வழங்குதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இதைச் செய்யலாம். தற்போது நடைமுறையில் உள்ள சட்டமன்றச் சட்டங்கள் பெரும்பாலும் காகிதத்தில் உள்ளன. இந்திய அரசியல் அமைப்பின் கூட்டு ஆன்மா எப்போதுமே முடங்கிக் கிடக்கும் நோய்க் குறியால் பாதிக்கப்பட்டுள்ளதால் இந்தியா பெண்கள் வாழ்வதகாப்பற்ற நாடாகவே உள்ளது.

### இந்திய தண்டனைச் சட்டம்

இந்திய தண்டனைச் சட்டமே இந்தியாவின் அடிப்படைக் குற்றவியல் சட்டமாகும். 1860ம் ஆண்டு நடைமுறைக்கு வந்த இச்சட்டம் மெக்காலே என்ற ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்டது. இச்சட்டத்தில் பெண்களின் பாதுகாப்புக்கெனப் பல பிரிவுகள் காணப்படுகின்றன.

### ஆபாச வெளியீடுகள் (பிரிவு 292)

பெண்களை ஆபாசமாக சித்தரிப்பதை இப்பிரிவு தண்டனைக்குரிய குற்றமாகக் கருதுகிறது. இத்தகைய குற்றத்திற்கு இரண்டாண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இவையிரண்டும் விதிக்கப்படலாம். இதே குற்றத்தை மறுபடியும் செய்வோருக்கு ஆறு மாதத்திற்குக் குறையாமல் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம். வழிபாட்டிடங்களில் உள்ள சிற்பங்கள், ஓவியங்கள் முதலியன இப்பிரிவின் கீழ் அடங்காது.

### கருச்சிதைவு (பிரிவு 312)

நல்லெண்ணத்துடன், பெண்ணின் உயிரைக் காக்கும் பொருட்டு கருச்சிதைவு செய்யப்பட வேண்டும். இல்லையேல், சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இவை இரண்டும் விதிக்கப்படலாம். எனினும் கருச்சிதைவு குறித்த மேற்படி பிரிவிற்குப் பதிலாக 'மருத்துவக் கருச்சிதைவுச் சட்டம் 1971' கொண்டு வரப்பட்டுள்ளது. இச்சட்டமானது பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது.

### (மானத்தை) நாணத்தைக் குலைத்தல் (பிரிவு 354)

பெண்ணின் மானத்திற்கு பங்கம் ஏற்படுத்தும் உட்கருத்துடன் தாக்குதல் அல்லது வன்முறையைப் பயன்படுத்துதல் குற்றமாகும். இத்தகைய குற்றத்திற்கு இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம். பெண் என்ற சொல் எல்லா வயது பெண்களையும் குறிக்கும்.

### வரதட்சணைச் சாவு (பிரிவு 304 (ஆ)

பிரிவு 304ன் படி,வரதட்சணைச் சாவு எனும் குற்றத்திற்கு ஏழாண்டுகளுக்குக் குறையாத ஆயுள் தண்டனை வரையிலான சிறைத் தண்டனை விதிக்கலாம். இக்குற்றம் பிணையில் விட முடியாதக் குற்றமாகும். இக்குற்றம் தொடர்பான விசாரணை மாவட்ட கூடுதல் சிறப்பு அமர்வு நீதிமன்றத்தில் (மகிளா நீதிமன்றம்) நடைபெறும்.

### பெண்ணைக் கடத்துதல்

இ.த.ச. பிரிவுகள் 361, 363, 366-இன் படி விருப்பத்திற்கு மாறாக ஒரு பெண்ணைக் கட்டாயப்படுத்திகடத்துதல் ஒரு குற்றம். இக்குற்றத்திற்கு 10 ஆண்டுகள் சிறையும் அபராதமும் விதிக்கப்படலாம்.

### விபச்சாரத்தில் ஈடுபடுத்துதல்

பிரிவு 372, 373ன்படி 18 வயதுக்குட்பட்ட இளம் சிறுமியரைவிபச்சாரத்திற்குப் பயன்படுத்துவதும், விற்பனை செய்வதும் கடும் குற்றமாகும். இக்குற்றத்திற்கு 10 வருடசிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம்.

### பாலியல் வன்முறை (கற்பழிப்பு)

பெண்கள் மீதானபாலியல் வன்முறைகள் மிகக் கொடியமனிதஉரிமைமீறல்களாகும். அன்றாடம் செய்தித்தாள்களைபுரட்டும் போது இத்தகையசெய்திகளைகாணமுடிகிறது. பாதிக்கப்பட்ட பெண்கள் அல்லது அவர்களின் பெற்றோர் இத்தகைய பாலியல் வன்முறை குறித்து பெரும்பாலும் புகார் செய்வதில்லை. இதனால் குற்றவாளிகள் இலகுவாக தப்பிவிடுகின்றனர். இவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் தண்டிக்கப்படவேண்டும்.

தொடரும்...



# கிறிஸ்து பிறப்புப் பெருவிழா

**25.12.2022 முதல் 01.01.2023**

### 25.12.2022 – ஞாயிறு – கிறிஸ்து பிறப்புப் பெருவிழா

**திருவிழிப்புத் திருப்பலி வாசகங்கள்**

முதல் வாசகம் : எசாயா 62:1–5

இரண்டாம் வாசகம் : திருத்தூதர் பணிகள் 13:16–17, 22–25

நற்செய்தி : மத்தேயு 1:1–25 (அ) மத்தேயு 1:18–25

**இரவுத் திருப்பலி வாசகங்கள்**

முதல் வாசகம் : எசாயா 9:2–4, 6–

இரண்டாம் வாசகம் : தீத்து 2:11–14

நற்செய்தி : லூக்கா 2:1–14

**விடியற்காலைத் திருப்பலி வாசகங்கள்**

முதல் வாசகம் : எசாயா 62:11–12

இரண்டாம் வாசகம் : தீத்து 3:4–7

நற்செய்தி : லூக்கா 2:15–20

### 26.12.2022 – திங்கட்கிழமை

முதல் வாசகம் : திருத்தூதர் பணிகள் 6:8–10. 7:54–60

நற்செய்தி : மத்தேயு 10:17–22

### 27.12.2022 – செவ்வாய்கிழமை

முதல் வாசகம் : 1 யோவான் 1:1–4

நற்செய்தி : யோவான் 20:2–8

### 28.12.2022 – புதன்கிழமை

முதல் வாசகம் : 1 யோவான் 1:5–2:2

நற்செய்தி : மத்தேயு 2:13–18

### 29.12.2022 – வியாழக்கிழமை

முதல் வாசகம் : 1 யோவான் 2:3–11

இரண்டாம் வாசகம் : லூக்கா 2:22–35

### 30.12.2022 – வெள்ளிக்கிழமை

முதல் வாசகம் : சீரா. ஞா. 3:2–7, 12–14அ (அ) கொலோ. 3:12–21

நற்செய்தி : மத்தேயு 2:13–15, 19–23

### 31.12.2022 – சனிக்கிழமை

முதல் வாசகம் : 1 யோவான்2:18–21


நற்செய்தி : யோவான் 1:1–18

### 01.01.2023 – ஞாயிறு

முதல் வாசகம் : எண்ணிக்கை 6:22–27

இரண்டாம் வாசகம் : கலாத்தியர் 4:4–7

நற்செய்தி : லூக்கா 2:16–21



Who
Except God
can give you
peace?
Has the world
ever been able
to satisfy
the Heart?

- St. Gerard Majella -

# நலம் தரும் இயற்கை வளம்



ஜே. அன்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்.

நலம் தரும் இயற்கை வளம்.
உறவுகளே இனிய வணக்கம்.
இன்றைய நலக்கல்வி..!

## தேங்காய்ப் பூ சாப்பிட்டால் கிடைக்கும் நன்மைகள்

தேங்காய்ப் பூ சாப்பிட்டால் கிடைக்கும் நன்மைகள் பற்றி தெரியுமா? நல்ல முற்றின தேங்காயிலிருந்து வரக்கூடிய கரு வளர்ச்சிதான் தேங்காய்ப்பூ. இந்த தேங்காய்ப்பூ தேங்காயின் முழு உள்பரப்பும் நிறைந்த உருண்டை வடிவத்தில் வெண்மையாக சிறிது இனிப்பு சுவையுடன் இருக்கும். கோயிலில் தேங்காய் உடைக்கும்போது அந்த தேங்காயில் பூ இருந்தால் அதை நல்ல சகுனமாக நாம் கருதுவதுண்டு. மட்டுமல்லாது தேங்காய் பூ அநேக மருத்துவ குணங்களையும் தன்னகத்தே கொண்ட ஒன்றாகும். தேங்காயிலும் தேங்காய் தண்ணீரிலும் இளநீரிலும் எவ்வளவு ஊட்டச்சத்துக்கள் இருக்கிறதோ அதைவிட மிக அதிக அளவு ஊட்டச்சத்துக்கள் இந்த தேங்காய் பூவில் உண்டு. பெரும் ஆபத்தை விளைவிக்கக் கூடிய உயிரைப் பறிக்கும் கொடிய நோய்களுக்கு மருந்தாகவும் அமைகிறது. அதன் நன்மைகள் என்னவென்று இந்த பதிவில் தெரிந்து கொள்வோம்.

### நோய் எதிர்ப்பு சக்தி

தேங்காய் பூவில் இருக்கின்ற அதிக அளவிலான ஊட்ட சத்து உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை இரு மடங்காக கூட்டிவிடும். அதன்மூலம் பருவகால நோய் தொற்றுகளைத் தவிர்க்க முடியும்.

### நீரிழிவு

தேங்காய்ப்பூவில் இன்சுலின் சுரப்பைத் தூண்டும் சக்தி இருக்கிறது. அதனால் அடிக்கடி தேங்காய் பூவை சாப்பிடுவதினால்இ ரத்தத்தில் உள்ள அதிக அளவிலான சர்க்கரையைக் கட்டுபடுத்துகிறது.

### இதய நோய்கள்

இதயக் குழாய்களில் படிக்கின்ற கொழுப்பு மாரடைப்பையும் வேறு சில இதயம் தொடர்பான நோய்களையும் உண்டாக்குகிறது. இது கொழுப்பு தேங்கும் பிரச்சினையை சரி செய்வதிலும் மிக சிறப்பாக தேங்காயைப் பூ செயல்படும்.

### தைராய்டு

தைராய்டு பிரச்சினை உள்ளவர்கள் என்னதான் மாத்திரைகள் சாப்பிட்டாலும் தைராய்டு சுரப்பியின் சில பக்க விளைவுகள் குறிப்பாக உடல் பருமன் போன்ற பிரச்சனைகளை சந்திக்க வேண்டியிருக்கும். ஆனால் எவ்வளவு ஆண்டுகளாக தைராய்டு பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தாலும் தேங்காய்ப் பூ சாப்பிட்டால் மிக வேகமாக குணமடைய ஆரம்பிக்கும்.

### ஜீரணத்தை அதிகமாக்க

இந்த தேங்காய்ப் பூவில் உள்ள மினரல்களும் வைட்டமின்களும் குடலுக்குப் பாதுகாப்பு அளித்து மலச்சிக்கலைப் போக்குகிறது. அஜீரணத்தை விரட்டியடிக்கிறது.

**மன அழுத்தம்**

மனதளவிலும் உடலளவிலும் சோர்வாக இருப்பவர்கள் அப்படி இருக்கும்போது தேங்காய்ப்பூ சாப்பிட்டால் உடலுக்கு அதீத சக்தி கிடைக்கும். நாள் முழுவதும் உற்சாகமாக இருக்க முடியும்.

**சிறுநீரகம்**

தேங்காய்ப்பூ சிறுநீரில் உருவாகும் நச்சுக்களை வெளியேற்றும் ஆற்றல் கொண்டது. தொற்றுநோய்களைக் குணப்படுத்தும். கிட்னி சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்க உதவுகிறது.

**உடல் எடை குறைக்க**

உடல் எடையை கட்டுக்குள் வைக்க தேங்காய்ப்பூ உதவுகிறது. தேங்காய்ப்பூவில் உள்ள கலோரியின் அளவு மிக மிக குறைவு. இதனால் எடை கூடாது. தேங்காய்ப்பூ உடலின் வளர்சிதை மாற்றத்தைத் தூண்டுவதினால் உடலில் உள்ள கொழுப்புகள் தேங்காமல் உடல் எடையையும் வேகமாக குறைக்க உதவுகிறது.

**இளமைப் பொலிவு**

சருமத்தை மிக இளமையாகவும் பொலிவுடனும் சுருக்கங்கள் இல்லாமலும் வைத்திருப்பதிலும் தேங்காய்ப்பூ முக்கிய பங்கு வகிக்கிறது. இதில் உள்ள ஆன்டி ஆக்சிடன்ட் இளமையை தக்க வைத்துக் கொள்கிறது. இந்த தேங்காய்ப்பூவில் தேங்காயில் உள்ள ஊட்டசத்தைவிட இரண்டு மடங்கு ஊட்டச்சத்துக்கள் அதிகமாகவே காணப்படுகின்றன.

எனவே நீங்களும்
இந்த தேங்காய்ப்பூ கிடைக்கும்போது
வாங்கி சாப்பிட்டு நோயற்ற ஆரோக்கியமான வாழ்க்கை வாழலாம்.

நன்றி உறவுகளே...
என்றும் உங்கள் அன்பு சகோதரன்

**ஜே. அன்புரோஸ்**
நலநெறியாளன்
தொடர்பு எண் : **9360456063**





இறைஇயேசுவில் பிரியமான ஞான ஒலி இணைய வார இதழ் வாசகர்களே,
உங்கள் அனைவருக்கும் இனிய

## கிறிஸ்து பிறப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள்.

பாலன் இயேசு உங்கள் உள்ளங்களிலும்,
இல்லங்களிலும் பிறந்து உங்கள் அனைவருக்கும்
அன்பு, மகிழ்ச்சி, உடல் ஆரோக்கியத்தை
நிறைவாகப் பொழிய மனமார வாழ்த்துகின்றேன்.

அருட்பணி. **சைமன் பீட்டர்**